

ஜனனம்
RAMANI
பார்த்திபன்

வெளியீடு : 2

கதைகள்

- ஜனனம்
- பாதியில் முடிந்த கதை
- கற்பு

ஓவியம் : ரமணி

கருத்துப் பரிமாறல்.......

அன்புடன் பார்த்திபன் அவர்களுக்கு,

உங்கள் 'நிஜங்கள்' வாசித்தேன்.......

.... .இன்று ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழும் எம்மவர்கள் முகமற்ற மனிதர்களாக மாறிக் கொண்டிருக்கும் வேளையில் கதைகளைப் போன்ற நேரான படைப்புகள் வரவேற்கத் தக்கவை.

.....................

கருத்துப் படங்கள் 'நிஜங்களுக்கு' மேலும் மெருகூட்டுகின்றன.

மற்றும் 'குற்றமில்லாத கொலைகள்' கதை நன்றாக இருந்த போதிலும் முடிவு திருப்திகரமாக இல்லை. படைப்புகள் கூடிய வரையில் சமுதாய முன்னேற்றத்துக்கு பயன்படக் கூடிய முறையில் அமைதல் வரவேற்கத்தக்கது.
.........

...................

92300 Levallois
France

இப்படிக்கு
அன்புடன்
மனோகரன்

---

வாசகருக்கு,

விமர்சனத்துக்கு நன்றி. ஆக்க பூர்வமான விமர்சனங்களே ஒரு எழுத்தாளனின் எழுத்துகளை பக்கப் படுத்தும்.

'குற்றமில்லாத கொலைகள்' மானத்துக்கு அஞ்சி பரிதாப முடிவை தேடிக் கொள்பவர்களின் பார்வையில் எழுதப்பட்டது. அதற்காக இந்த முடிவை த்தான் எல்லோரும் தேடிக் கொள்ள வேண்டுமென்பது என் கருத்தல்ல. சிலரின் விளையாட்டால் எப்படி வேதனைகள், விபரீத முடிவுகள் உண்டாக்கப் படுகின்றன என்பதைக் காட்டவே அந்தக் கதை. அடுத்தவரின் உணர்வுகளை மதிக்கத் தெரியாதவர்களுக்காகத்தான் அப்படி ஒரு முடிவை உதாரணமாக்கி காட்டினேன். துணிவாக எதிர்ப்புகளை எதிர்கொள்ள முடியாமல் மீளாத் துயிலை விரும்புகிறவர்கள் தங்களின் முடிவால் தங்களைப் பாதித்தவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். விபரீத விளையாட்டுகளால், வம்புப் பேச்சுகளால், வதந்திகளால் அப்பாவிகள் எப்படிப்பட்ட முடிவுகளை தேடிக் கொள்கிறார்கள் என்பதை மனிதாபிமானத்தை மறந்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதுவே என்னுடைய பக்கம்.

—பார்த்திபன்.

# ஜனனம்

திருச்சிராப்பள்ளி மிகவும் கஷ்டப்பட்டு வானொலியில் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது.

இலங்கையிலிருந்து கொண்டே இலங்கைச் செய்திகளை இந்திய வானொலி மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு இலங்கையில் 'சுதந்திரம்' இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களுக்கே யாழ்ப்பாணத்தில் நடப்பவற்றை முற்று முழுதாக அறிய முடியாமலிருக்கையில் மற்றைய தமிழ் பகுதிகளில் நடைபெறுவதை அறிவதெப்படி?

ராஜன் முன் கூடத்தில் கதிரையில் இருந்தபடி ஈழநாடு பார்த்துக் கொண்டிருந்தான்.

விமானத் தாக்குதல் தலைப்பு செய்தியாக்கப்பட்டு ஏனைய மரணங்கள், மோதல்கள் கீழே செய்திப் பிரிவுகளாக இருந்தன.

முன் பக்கத்தில் தாக்குதல்களும் பின் பக்கத்தில் இழப்புகளும் வந்திருந்தன.

ராஜனின் மனைவி வசந்தி இருக்கும் பொருட்களை வைத்து சமையல் பண்ண தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டிருந்தாள்.

மூத்த மகன் குமார் வெளியே போயிருந்தான்.

இரண்டாவது மகள் ராஜி கட்டிலிலிருந்து புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ராஜன் அருத்த ஊரிலிருந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் புடவைப் பிரிவில் வேலை பார்த்து வருகின்றான்.

நேற்று முன் தினம் தீவிரவாதிகளுக்கும்இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கம் இருந்த சுற்றாடல் அந்தப் பகுதி மக்களால் பாதுகாப்பு வலயமாக கணிக்கப்பட்டு இருப்பிடங்களை விட்டு அவர்கள் வெளியேறியிருந்தார்கள்.

கடை பூட்டப்பட்டிருந்ததால் ராஜனுக்கு தற்காலிக ஓய்வு கிடைத்திருந்தது.

நேரம் மூன்று மணியாகியிருந்தது.

வெயில் யாழ் நகருக்கே உரிய முறையில் எரித்தது.

மரங்களில் பறவைகள் அதிகம் இருக்கவில்லை. திடீர் திடீரெனக் கேட்கும் வெடிச் சத்தங்களினால் அவைகளிலும் அநேகமானவை இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

"சாப்பிடுவோம் வாங்கோ" வசந்தி சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்.

ராஜன் பத்திரிகையை அப்படியே வைத்துவிட்டு எழுந்து போனான்.

ராஜி ஏற்கெனவே வந்து அமர்ந்திருந்தாள்.

குமாரை காணவில்லை.

மூவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

உழவர்களின் நிலையை உணவு வகைகளே விளம்பரப்படுத்தின. சோறுடன் தயிர், கீரை, முருங்கையிலை வறை, ஊறுகாய் ஆகியவைதான் இருந்தன.

தண்ணீர் பாய்ச்சுவதற்காக தோட்டத்தில் நின்றால் அகால மரணம். தப்பித் தவறி பாடுபட்டுச் சேகரித்த மரக்கறிப் பயிர்களை விற்க கொண்டு போவதோ விற்றுவிட்டு திரும்பி வருவதோ உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில்தான்.

தன்னுடைய தேவைக்கே கமக்காரன் உணவை தேடி நிற்கையில் மற்றவர்களுக்கு விற்பனை செய்ய முடியுமா?

வசந்தி கெட்டிக்காரி. ரோஜாவோ, குரோட்டனோ வைக்காமல் தக்காளி, வெண்டி, மரவள்ளி என்று நிலத்தை பிரயோசனமாக்கி வைத்திருந்தாள்.

அந்த ஊரில் இன்றும் அதிகம் பேர் எதிர் காலத்தை கணக்கிடாது எல்லாவற்றிற்கும் மற்றவர்களையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மீனுக்கு மீன்காரன். மரக்கறிக்குத் தோட்டக்காரன். விறகுக்கு விறகுவெட்டி.

அவர்களும் மனிதர்களே. அவர்களையும் பிரச்சனைகள் பாதிக்கின்றன என்பதை அதிகம் பேர் உணரவேயில்லை.

சாப்பிட்ட பின் ராஜன் திரும்பவும் வந்து பத்திரிகை படிப்பதை தொட-

ர்ந்தான்.

வானொலியில் "........பேச்சு வார்த்தை மூலமே இலங்கைப் பிரச்சனைகளை சுமுகமாக தீர்க்கலாம் என்று ராஜீவ் காந்தி இன்றும் நம்புகிறார்....." என்பதுடன் செய்திகள் முடிவடைந்து கால நிலை அறிவிப்புகள் தொடர்ந்தது.

".....இதை தொடர்ந்து பெரும் புயல் வீசலாம் என எதிர்பார்க்கப்படுகிறது........."

ராஜுவுக்கு அரசியலில் அதிகம் ஈடுபாடு இல்லை. கடையில் வேலையுண்டு, வீட்டில் குடும்பமுண்டு என்று இருந்து கொண்டான்.

எனினும் பிரளயமாகப் பொங்கி வரும் போராட்ட அலைகள் எல்லோரையும் போல அவனுள்ளும் மாற்றங்களை ஏற்படுத்தின.

ஆந்த வசதிகள், குடும்பம், வாழ்க்கை எல்லாமே நிலையற்றது போல் அவன் உணரத் தொடங்கினான்.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததால் ராஜி ஆனந்த விகடன் படித்துக் கொண்டிருந்தாள்.

வயது பதினெட்டென்றாலும் அரசியல் பிரச்சனைகளின் தாற்பரியங்கள், அகமூல் சமூகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் எதுவும் அவளுக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை.

நேரம் பிந்தினாலும் பசிக்குச் சாப்பிடக் கிடைத்தது. உடுக்க உடுப்பு கிடைத்தது. இருக்க இருப்பிடம் இருந்தது. போதாததற்கு பொழுது போக்க கதைப் புத்தகங்களும் கிடைத்தன.

இப்போதைய அவள் எண்ணமெல்லாம் சினிமா கிசுகிசுவில் ஆட்களைக் கண்டு பிடிப்பதுதான்.

பாடசாலையில் இருக்கும் போதும் ராஜி அரசியலில் அக்கறை காட்டவில்லை. போராளிகளின் தாக்குதல்களை மிகைப்படுத்தி சினிமா போல் விமர்சனம் செய்து பொழுது போக்கினாளே ஒழிய அந்தப் போராளிகள் யாருக்காக?, ஏன்?, எதற்காக? போராடுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

சினிமா கதாநாயகர்களைப் போலவே போராளிகளைக் கணித்துக் கொண்டாள். காசுக்காக 'சாகும்' நடிகனைப் போல் உரிமைக்காக ஆசாபாசங்களை மறந்து வீர மரணம் எய்தும் விடுதலை வீரன் உயிர்ப்பதில்லை எனப் புரிந்து கொள்வதில்லை.

குமார் ராஜியிலிருந்து வித்தியாசப்பட்டான். பாடசாலையிலேயே அரசியல் ஈடுபாடு இருந்தது.

போராளிகளின் வெளியீடுகளை சேகரித்துக் கொண்டு வந்து மாணவ நண்பர்களுக்கு காட்டுவான்.

ஆக்கபூர்வ விமர்சனங்களை பகிர்ந்து கொள்வான்.

தன்னுடைய நண்பர்கள் எல்லாம் இயக்கங்களில் சேர்ந்து கொண்ட போது தன்னால் போக முடியவில்லையே என்று மனம் வெதும்பினான். விடாது அவனில் ஒட்டியிருந்து தொல்லை கொடுக்கும் அஸ்மா, பித்தவெடிப்பு நோய்கள் தன்னால் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட முடியாதென்ற தாழ்வுணர்ச்சியை அவனுள் உருவாக்கியிருந்தன.

ஆனாலும் அவன் மனம் தளர்ந்து விடவில்லை. விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளை தனக்குத் தெரிந்தவர்களிடம் விளக்கினான்.

தனக்குத் தெரிந்தவரை, தன்னால் இயன்றவரை நண்பர்களை, உறவினர்களை அரசியல் மயப்படுத்த முயன்றான். இதற்காக கிண்டல்கள், கேலிகள் கூட அவனுக்குப் பரிசாக கிடைத்தது.

"உவருக்கேன் உந்த தேவையில்லாத வேலை"

"விருப்பமெண்டா போய் துவக்கைப் பிடியேன்"

"என்னோட ஏன் விசர் கதை கதைக்கிறாய்"

"தான் சுகமா இருந்து கொண்டு மற்றவையை இயக்கத்துக்கு அனுப்ப பார்க்கிறார்"

துப்பாக்கி ஏந்துவதுதான் புரட்சி, இயக்கங்கள் செய்வதுதான் போராட்டம், என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சரியான விளக்கம் அளிக்க குமார் மிகவும் சிரமப்பட்டான்.

ராஜனுக்கு குமாரின் நடவடிக்கைகள் தெரியாமலில்லை. ஆனாலும் அவனைத் தடுக்க ராஜன் விரும்பவில்லை.

"வீட்டில வயசுக்கு வந்த தங்கச்சி இருக்கிறா. உன்ரை செய்கைகள் அவளின்ரை எதிர்காலத்தையும், இந்த வீட்டில் இருப்பவர்களையும் பாதிக்காதபடி நடந்து கொள்"என்று மட்டும் சொல்லி வைத்தான்.

குமாருக்கு இந்த மட்டும் தன்னை தந்தை அனுமதித்ததில் திருப்திப்பட்டான். ஆனாலும் அப்பா அறிய வேண்டியது இன்னும் இருக்கு என்பதை அறிந்து கொண்டான்.

விடுதலை இயக்கங்களின் பிரசுரங்களை எல்லோர் கண்களிலும் படும்படி வீட்டில் கொண்டு வந்து வைப்பான்.

"உதுகளை ஏன் இங்க கொண்டு வாறாய்? ஆமிக்காரன் வந்தான் என்டால் எல்லாரும் துலைஞ்சம்" வசந்தி மட்டும் அடிக்கடி முணுமுணுப்பாள்.

வசந்திக்கும் நாட்டு நடப்புகள் சுலபமாகப் புரிவதில்லை.

போராளிகள் இறந்தால் "பாவம் பெடியள். சுக துக்கங்களை விட்டு சண்டை பிடிச்சு சாகிறாங்கள்" என்று கவலைப்படுவாள்.

கண்ணி வெடியில் சிக்கி இராணுவம் இறந்தபின் ஏனைய இராணுவ வீரர்கள் வந்து சம்பவம் நடந்த இடத்திலுள்ள வீடுகளை எரித்து ஆட்களை சுட்டு தமது தோழர்களுக்கு ஆத்ம சாந்தி செய்கையில் "பெடியளுக்கேன் தேவையில்லாத வேலை சும்மா ஆமியோட சண்டை பிடிக்கப் போய்த்தானே அவங்கள் எல்லாத்தையும் அழிக்கிறாங்கள்" என்று திட்டுவாள்.

இந்த அழிவுகள் எல்லாம் அரசினால் முற்கூட்டியே திட்டமிடப்பட்டு நடாத்தப் படும் செயல்கள்தான் என்பதை அவள் அறியவில்லை.

வானொலியில் திருச்சிராப்பள்ளி மாற்றப்பட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 'பூவும் பொட்டும்' மங்கையர் மஞ்சரியை ஆரம்பித்திருந்தது.

ராஜன் இராணுவத்தால் மேற் கொள்ளப்பட்டிருந்த கற்பழிப்புச் செய்தியையும் படித்துவிட்டு பத்திரிகையை மூடி வைத்தான்.

அயர்ச்சியினால் கண்களை மூடினாலும் தூக்கம் வந்து விடவில்லை.

பத்திரிகைச் செய்திகள் படமாக்கப்பட்டு அவன் நினைவில் ஓடிக் கொண்டிருந்தன.

சூரியன் தனது பாதையில் கொஞ்சம் முன்னேறியிருந்தான். வெயிலின் கொடூரம் தணிந்திருக்கவில்லை.

அன்று ராஜன் பரபரப்பாய் இருந்தான்.

அவனுடைய தங்கை இருந்த ஊரை இராணுவம் சுற்றி வளைத்து தாக்கிய செய்தி அதிகாலையில்தான் அவனுக்கு கிடைத்தது.

அதை அறிந்த நேரம் தொடக்கம் அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. உடனேயே அங்கே சென்று விடத் துடித்தான்.

பஸ் போக்குவரத்துகள் இருக்கவில்லை. நேற்றிரவு சைக்கிளைக் கொண்டு சென்ற குமார் இன்னமும் வரவில்லை.

சைக்கிளுக்காக காத்திருந்தான் ராஜன்.

"எந்த நேரமும் ஆமிக்காரன் வரலாம். இவர் சைக்கிளில போகப் போறன் என்டு நிக்கிறார்" வசந்தி முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

ராஜி கதைப்புத்தகத்துடனேயே இருந்தாள்.

பத்து மணியளவில் குமார் திரும்பி வந்தான்.

ராஜன் எல்லோருக்கும் சொல்லிக் கொண்டு அவசரமாகப் போனான்.

பாதையில் போக்குவரத்து, நடமாட்டங்கள் குறைவாக இருந்தாலும் முற்றாக நின்று விடவில்லை.

அந்தளவு சனங்கள் வெடிகளுக்கும், தாக்குதல்களுக்கும் பழகிப் போயிருந்தா. ர்கள்.

முதல் நாள் குண்டு போடப்பட்டிருந்தால் அடுத்த நாளே ஸ்தலத்துக்கு விரைந்து பார்வையிட்டார்கள்.

சாப்பாட்டுச் சாமான்கள் வாங்க புறப்பட்டுத் திரிந்தார்கள்.

வைத்தியசாலைக்கும் போனார்கள். தமக்கு வேண்டியவர்களை தேடி அலைந்-தார்கள்.

மொத்தத்தில் நடப்பது நடக்கட்டும் என்ற நிலைக்கு வந்திருந்தார்கள்.

ராஜன் இன்னும் நான்கு மைல்கள் போயாக வேண்டும்.

முழுது வியர்த்து மேல் சட்டையை நனைத்திருந்தது.

கடைகள் எந்நேரமும் பூட்டப்படுவதற்கு தயாராக ஒற்றைக் கதவில் திறந்திருந்தன.

கோயில் மணி கூண்டில் இரண்டு காகங்கள் உட்கார்ந்து கத்திக் கொண்டிருந்தன.

ராஜன் ஊருக்குள் நுழையும் போதே பாதிப்புகள் கண்ணில் பட்டன.

சில வீடுகள் இன்னும் எரிந்து கொண்டிருந்தன. பாதையில் ஆங்காங்கே இரத்த திட்டுகள் இருந்தன. சாம்பல் மேடுகள் குவிந்திருந்தன.

ஒரிடத்தில் கும்பலாக ஆட்கள் நின்றார்கள்.

ராஜன் சைக்கிளிலிருந்து இறங்கி உருட்டிக் கொண்டு அவர்களை நெருங்கினான்.

அந்த இடத்தில் அநியாயமாக உயிரை இழந்த உடல்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

அவர்களுக்கு வேண்டியவர்கள், அவர்களை வேண்டியவர்கள் எல்லாம் சுற்றி நின்று கதறி அழுது கொண்டிருந்தார்கள்.

இளைஞர்களில் சிலர் சாம்பல் மேடுகளை கிளறிக் கொண்டிருந்தனர்.

இன்னும் சிலர் பாலும், தேநீரும் கொடுத்தார்கள்.

காயம் பட்டவர்களை மருத்துவர் ஒருவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் ஏற்கெனவே பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தனர்.

ராஜன் தங்கையை கண்களால் தேடினான். அவர்கள் தப்பியிருக்க வேண்டும் என்று உள் மனம் விரும்பியது.

ஒரிடத்தில் அவன் கண்கள் நிலைகுத்தி நின்றன.

தங்கை, அவள் கணவன், நான்கு வயது மகள் மூவரும் அருகருகாக கிடத்தி வைக்கப் படடிருந்தனர்.

அவர்களின் உடல்கள் பாதி கருகிய நிலையில் இருந்தன.

தங்கை புருசனின் உறவினர்கள் பக்கத்தில் நின்று அழுது கொண்டிருந்தார்கள்.

ராஜனின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் வழிந்தோடின. சைக்கிளை அப்படியே கீழே போட்டுவிட்டு உடல்களின் பக்கமாக போனான்.

அவனைக் கண்டதும் உறவினர்கள் இன்னும் பெரும் குரலில் அழுதனர்.

ஆண், பெண், பச்சிளம் குழந்தை, வயது முதிர்ந்தவர்கள், அங்கவீனர்கள், கற்பிணிகள் என்ற பாகுபாடு எதுவுமின்றி எல்லோரும் பிணமாக்கப்பட்டிருந்தனர்.

துப்பாக்கிக்குத்தான் இன்னாரை சுட வேண்டும் என்ற பேதம் தெரியாவிட்டாலும் அதை இயக்கும் மனிதருக்குமா தெரியவில்லை?

இப்படி கண்மூடித்தனமாக மனிதரை மிருகங்கள் தான் வேட்டையாடுமேயொழிய இன்னொரு மனிதனாக இருக்க முடியாது.

நாகரிகம் புத்தகத்திலும், பேச்சிலும், உடையிலும் தான் இருக்கிறதேயொழிய செயலில் காட்டுமிராண்டித்தனம் இன்னும் மறையவேயில்லை.

இரத்தம் குடிக்கும் ஐந்தறிவு உயிரினங்களிலிருந்து பகுத்தறிவு படைத்த மனிதன் வேறுபடவே விரும்பவில்லை.

வெளி உலகத்தில் என்னதான் நடக்கிறது என்பதை அறிய முடியாமல் பொம்மைகளோடு விளையாடும் குழந்தைகள், நாளைய உலகின் தலைமுறைகள் கூட கொலை வெறியர்களால் உயிரிழந்து ஜடமாகியிருந்தார்கள்.

போராடுபவர்களை பெற்றுத்தரும் தாய்மைகளும் அழிக்கப்பட்டிருந்தன.

வரவர அந்த இடத்தில் மக்கள் கூட்டம் அதிகரித்தது. பார்வையாளர்களுக்கும் கண்ணீர் வந்தது.

அப்பொழுதே விமர்சனங்கள் பரிமாறப்பட்டன.

பிணங்கள் உரியவர்களால் அவரவர் இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அகதி முகாம்களுக்கு போக வேண்டியவர்கள் தமது வீடுகளின் இடிபாடுகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜன் உறவினர்களுடன் ஈமக்கிரியைகளுக்காக அவர்கள் வீட்டுக்கு போனான்.



நேரம் போகப்போக அந்த இடத்தில் நின்றவர்கள் கலைந்து போனார்கள்.

பத்திரிகைக்காரர்கள் குறிப்புகளுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்கள்.

"நடந்தது நடந்திட்டுது. இனி எங்கட அலுவல்களைப் பாப்போம்" என்று பலர் கதைத்துக் கொண்டு போனார்கள்.

இதே சம்பவம் இனித் தங்களுக்கும் ஏற்படலாம் என்ற கவலை அநேகம் பேருக்கு இருக்கவில்லை. மாறாக "இப்போதைக்கு நாங்கள் தப்பியிட்டோம்" என்ற சின்ன சந்தோசம்தான் இருந்தது.

•~•

நீண்ட நேர மௌனத்தின் பின் ராஜன் சொன்னான்.

"நான் இயக்கத்தில சேரப் போறன்"

வசந்தி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"உங்களுக்கு எந்த நேரமும் பகிடிதான்"

ராஜன் சிரிக்கவில்லை. உறுதியாகவே சொன்னான்.

"பகிடியில்லை. உண்மையாத்தான் சொல்லுறன். நான் போகத்தான் போறன்"

வசந்தி ராஜனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று யோசித்தாள். 'நல்லா இருந்த மனுசனுக்குப் பேய் பிடிச்சிட்டுது போல'

இந்த சமயம் குமாரும், ராஜியும் வீட்டில் இருக்கவில்லை.

ராஜன் முடிவெடுத்தவன் போல் தொடர்ந்து கதைத்தான்.

"என்னை மன்னிச்சுக் கொள் வசந்தி. இண்டைக்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கும் அக்கிரமங்களைப் பாத்து விட்டு என்னால் சும்மாயிருக்க முடியவில்லை. நானும் மனுசன்தான். எனக்கும் உணர்ச்சிகள் இருக்கு. அதாலதான் நடக்கிற கொடுமைகளை காண மனம் பொறுக்கேல. உனக்கு கணவனாகவும், குமார், ராஜிக்கு தகப்பனாகவும் மட்டும் நான் இருப்பதில் அர்த்தமேயில்லை. ஏனென்டா இந்த ஸ்தானம் நிலையற்றது. எந்த நேரத்திலும் இராணுவத்தின் கொலை வெறிக்கு நான் பலியாகலாம். ஆனால் அப்போ சராசரி மனிசனாக சாக நான் விரும்பேல. குழந்தைகளுக்குத் தகப்பனாகவும், பெண்களுக்குப் பாதுகாவலனாகவும் என்னை வைத்துக் கொள்ள

விரும்பிறேன். எங்களுக்காக மட்டும் உழைக்காமல் மற்றவர்களுக்குமாகப் போராடப் போகிறேன்."

வசந்தி இமைக்காமல் ராஜனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளால் எதையும் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. 'வீட்டுக்குள்ள இருந்த மனுசன் இப்பிடிக் கதைக்கிறார்?'

நேரம் செல்லசெல்லத்தான் அவளுக்குப் பயம் வந்தது. 'ஒரு வேளை இவர் உண்மையாவே போடுவாரோ? அப்பிடிப்போனா எங்கட கதி?'

ராஜன் வசந்தியில் ஏற்படும் மாறுதல்களை கவனியாமல் தொடர்ந்து கதைத்துக் கொண்டேயிருந்தான்.

"முந்த நாள் என்ரை தங்கச்சி போயிட்டாள். தானாகச் சாகவில்லை. புருசன், பிள்ளையோட வலுக்கட்டாயமாக சாகடிக்கப்பட்டாள். அந்தப் பிஞ்சுக் குழந்தை நெருப்பில் என்னமாய் துடித்திருக்கும்? எப்பிடி எல்லாம் கதறியிருக்கும்? இதே நிலமை நாளைக்கு எங்கட வீட்டிலும் வரலாம். இராணுவம் என்னைச் சுடலாம். உன்னைச் சுடலாம். குமாரை, ராஜியைக் கூட சுடலாம். உயிரோடயே வீட்டுக்குள்ள வைச்சு நெருப்பு மூட்டலாம். இன்றைய நிலமையில இந்த வாழ்க்கையே நிரந்தரமில்லை. இந்த நிலமையில எவருக்குமே பிரயோசனப்படாமல் செத்தால் நாங்கள் மனுசர் என்டதற்கோ, நாங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கோ அர்த்தமேயில்லை"

"நிப்பாட்டுங்கோ" திடீரென்று கத்தினாள் வசந்தி.

"என்ன உங்கட பாட்டில கதைச்சுக் கொண்டே போகிறியள்? கலியாணம் கட்டி ரண்டு பிள்ளையளையும் பெத்துப் போட்டு இயக்கத்துக்குப் போகப் போறியளோ? உந்த யோசினை இருந்திருந்தால் கலியாணம் செய்யாமல் விட்டிருக்க வேணும்"

ராஜன் கோபமே கொள்ளவில்லை. வசந்தியிடமிருந்து இந்த எதிர்ப்பை அவன் முன்னமே எதிர்பார்த்திருந்தான்.

எந்த மனைவிதான் கணவன் தனைவிட்டுப் பிரிவதற்கு அனுமதிப்பாள்?

ஆனாலும் ராஜன் தன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

"வசந்தி, கோபப்படாதை. நிதானமா யோசிச்சுப் பார். உனக்கும் புரியும். எங்கட கலியாணம் நடக்கேக்க நிலமை இந்தளவிற்கு இருக்கேல. இப்ப தான் பயங்கரமா மாறியிருக்கு. எல்லாரும் குடும்பம், பிள்ளை, குட்டி என்டு வீட்டோடயே இருந்திருந்தால் போராட்டமே தொடங்கியிருக்காது. நாங்களும் நாகரீகமான அடிமையளா இந்த நாட்டிலே இருந்திருப்போம். பிள்ளையளின்ரை படிப்பெல்லாம் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கும். ஒரு வேளை தமிழே கதைக்கேலாமல் போயிருக்கலாம்"

வசந்தி பிரமிப்போடு ராஜனையே பார்த்தாள். 'இவ்வளவும் கதைக்க இவருக்கு யார் சொல்லிக் குடுத்தது?'

கோபம் வந்தது. பயமாகவும் இருந்தது. கண்ணீர் கூட வந்தது.

"வசந்தி, வெளியுலகை நீ அதிகம் பாக்கேல. தினம்தினம், மனிக்குமனி உயிர்க் கொலைகள் நடக்கிறதை பேப்பரில தான் பாத்திருக்கிறயேயொழிய நேரே பாக்கயில்லை. கற்பழிக்கப்பட்ட பொம்பிளையளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறயே ஒழிய நேராகச் சந்திக்கவில்லை. உன்ரை கண்ணால எல்லாக் கோரங்களையும் பாத்து காதால அழுகுரல்களைக் கேட்டால் நீ என்னை இப்பிடித் தடுக்கவும் மாட்டாய். கலங்கவும் மாட்டாய். நான் இயக்கத்தில சேர்றதால நிச்சயமா உயிரை இழப்பேன் எண்டில்லை. உன்னுடைய மாங்கல்ய பாக்கியம் நிலைக்குமெண்டா மீண்டும் சந்திக்கலாம். ஒரு வேளை நான் செத்தாக்கூட நீ கவலைப்படத் தேவையில்லை. நான் சாதாரணமாக இறக்கப் போவதில்லை. நம் பிள்ளைகளுக்காக, அடுத்த தலைமுறைகளின் நல்ல எதிர்காலத்துக்காகவே என்ரை உயிர் தியாகம் செய்யப்படும்"

வசந்தி அழத் தொடங்கினாள். கண்ணீர் தொடர்ந்து வந்தது.

ராஜனுக்கு சங்கடமாக இருந்தது.

"என்ன பகல் கனவு காணுறியளோ?"

வசந்தியின் குரலைக் கேட்டு விழித்தான் ராஜன்.

அவன் முன்னால் வசந்தி சிரித்துக் கொண்டு நின்றாள்.

'ஓ, நடந்ததொன்றும் நிஜமில்லையா? 'ராஜன் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான். 'இல்லை. எதுவுமே பொய்யில்லை. நடக்கத்தான் போகிறது. நான் போகத்தான் போகிறேன். ஆனால் வசந்தியிடம் சொல்லிக் கொண்டல்ல. அவள் என்னை போகவிடமாட்டாள். என் மனமும் மாற்றப்பட்டுவிடும். கூடாது. சொல்லக் கூடாது'

"என்னப்பா, உங்களுக்கு என்ன பிடிச்சிருக்கு?"வசந்தி சிரிப்பு மாறாமல் கேட்டாள்.

ராஜன் தன்னை சுதாகரித்துக் கொண்டான்.

"ஒண்டுமில்லை. தங்கச்சியின்ரை ஞாபகம் வந்தது. அதுதான்"

வசந்தி சமையலறைக்குள் போய் விட்டாள்.

ராஜனுக்கு மனதை ஏதோ செய்தது. 'ஆசை மனைவி, அருமைப்பிள்ளைகள். இவர்களையெல்லாம் பிரிந்து போகப் போகிறேன். நான் போனபின் இவர்களுக்கு

யார் துணை? கொஞ்ச நாட்களுக்கு என்னை நினைத்துக் கலங்குவார்கள். பின்னர் தேறி விடுவார்கள். இழப்பின் துக்கம் சீக்கிரமே மறைந்து விடும். நடைமுறை வாழ்க்கைக்கு விரைவில் வந்து விடுவார்கள்.

பணத் தேவைக்கு என்ன செய்வார்கள்? இராணுவம் என்னைச் சுட்டாலும் இதே கதி வரலாம்தானே? ஆனபடியால் தாமாகவே அவர்கள் தங்களுடைய தேவை பூர்த்தி செய்யப் பழக்கப்படுத்திக் கொள்ளட்டும்.'

ராஜன் பலவாறு யோசித்துக் கொண்டிருந்தான்.

உலகை மூடியிருக்கும் கருமையை நீக்க வெண்ணிலா தன்னாலான முழு முயற்சியும் எடுத்துக் கொண்டிருந்தது. மேகங்கள் அவ்வப்போது இடையூறு ஏற்படுத்தினாலும் நிலவு தன கடமையிலிருந்து தவறவில்லை.

தெரு ஓரமாக ராஜனும் குமாரும் நின்றார்கள்.

குமாரினால் எதையும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அப்பா தன்னை இப்படி தனியே கூட்டி வருவார் என்றோ, இயக்கத்தில் சேர்த்துவிடும்படி கேட்பார் என்றோ அவன் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை.

தன் நினைவுக்கு வர அவனுக்கு நீண்ட நேரம் எடுத்தது.

"அப்பா, உண்மையாத்தான் சொல்லுறீங்களா? திடீர் என்டு வாற உணர்ச்சியிலை எடுத்த முடிவில்லையே?"

"இல்லை குமார். கன நாள் யோசிச்சுத்தான் முடிவெடுத்திருக்கிறன். எனக்கு முந்தி அரசியல் ஈடுபாடு இருக்கேல்ல. என்டாலும் தற்போதைய பிரச்சினையளால சூழ்நிலையால போராட்டத்தில என்னையறியாமலே ஈர்க்கப் பட்டிருக்கிறன். எப்பவோ நான் போராட்டத்தில இணைஞ்சு கொள்ள விரும்பினாலும் ஏதோ ஒன்டு என்னைத் தடுக்க, தயங்க வைத்தது. ஆறு சமீபத்தில நான் கண்ணால கண்ட அவலக் காட்சியள் எல்லாம் தடையளை உடைத்து என்னைத் தூண்டி விட்டன. இந்த உந்து சக்தி என்னை விரைவு படுத்தியதே தவிர திடீர் உணர்ச்சிப்பெருக்கில்லை."

ராஜன் நிதானமாகக் கதைத்தான்.

குமார் தந்தையை புரிந்து கொண்டான். தனது முயற்சிகளுக்கும், பிரச்சாரங்களுக்கும் நல்ல பலன் கிடைத்திருப்பதாக சந்தோசப்பட்டான்.

"அம்மாவிட்ட சொன்னீங்களா?"

"இல்லை"

குமாருக்கு அம்மாவைப்பற்றித் தெரியும். பெண்கள் தம்மை மாற்றிக்கொள்ள இன்னும் தாமதம் இருக்கிறதென்பதை புரிந்து கொண்டான்.

சில நிமிடங்கள் தந்தையும், மகனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அப்பாவின் கண்களில் நீர் பனித்திருப்பதை குமார் கவனிக்கத் தவறவில்லை.

"போவோமா?"

"உம்"

குமாரின் வழிகாட்டலில் ராஜன் சைக்கிளை செலுத்தினான்.

தன் தோழர்களிடம் தந்தையை அழைத்துப் போய்க் கொண்டிருந்தான் குமார்.

வானம் நன்கு சிவந்திருந்தது.

# பாதியில் முடிந்த கதை

அதிகாலை.

குளிர் காற்று உடலைத் தழுவிப் போனது. இரண்டொரு பறவைகள் அவசரமாக எங்கோ பறந்து போயின. சேவல் ஒன்று தனித்துக் கூவியது.

நான் கிணற்றடியில் பல் துலக்கிக் கொண்டிருந்தேன். பற்பொடி கையிலிருந்து இடம்மாறி பற்களோடு சண்டை பிடித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி துப்பி அந்தச் சண்டையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டிருந்தேன்.

என் கவனம் முழுவதும் பல் துலக்குவதில் லயிக்கவில்லை. ஏதேதோ நினைவுகள் நிழலாடின.

சவூதிக்குப் போவதற்காக ஏஜன்சி ஒருவனிடம் பணம் கட்டியிருந்தேன். பல மாத கால தாமதத்தின் பின் இன்று மாலை விமானப் பிரயாணச் சீட்டு, மற்றும் தேவையான பத்திரங்களை தருவதாகச் சொல்லியிருந்தான்.

பிரயாணம் செய்ய வேண்டிய திகதி அடுத்த வாரம் வருகிறது.

இனி எனது குடும்பத்தின் கஷ்டங்கள் தீர்ந்து விடும். மண் குடிசை வீடாக மாறி விடும். தேவைகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படும். தம்பி, தங்கைகள் தொடர்ந்து படித்து முன்னேறுவார்கள்.

"என்னண்ணு யோசினை? இப்பவே சவூதிக்குப் போயிட்டியா?"

வனிதாவின் குரல் கேட்டு என் நினைவுகளைக் கலைத்துக் கொண்டேன்.

வனிதா என் தங்கை. மூத்தவள் அக்கா. உயர்தர வகுப்புவரை படித்துவிட்டு அம்மாவோடு சமையலுக்கும், வீட்டு வேலைகளுக்கும் உதவியாக இருந்தாள்.

இரண்டாவது நான். சென்ற வருட முடிவில் உயர்தரப் பரீட்சை எடுத்திருந்தேன். பரீட்சை முடிவுகள் வரவில்லை. கட்டாயம் சித்தியடைவேன் என்று தெரிந்தும் வீட்டின் பொருளாதார வசதிகளை மனதில் கொண்டு தொடர்ந்து படிக்கும் எண்ணத்தை கைவிட்டுவிட்டேன்.

இப்போது சவூதிக்குப் போய் வேலை செய்யவும் தயாராகிவிட்டேன்.

எனக்கு அடுத்தவன் சிவா. பத்தாவது படித்துக் கொண்டிருந்தான்.

அடுத்தவள் வனிதா எட்டாம் வகுப்பிலும், அவளின் தங்கை ஆறாம் வகுப்பிலுமாக படித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்னண்ணை, கேட்ட கேள்விக்கு மறுமொழியை காணேல?" வனிதா குடத்தைக் கொண்டு வந்து திட்டியில் வைத்தாள்.

தண்ணீரை அள்ளி குடத்திற்குள் ஊற்றினேன். குடம் நிரம்பியதும் அதை எடுத்துக் கொண்டு அவள் போய் விட்டாள்.

எங்கள் வீட்டைப் பற்றிக் கொஞ்சம் விபரிக்க வேண்டும்.

அது முழுமையானதொரு வீடும் அல்ல. குடிசையும் அல்ல. வீட்டின் முழுத் திட்டத்திலும் பாதியிலும் குறைவாகவே வீடு கட்டப்பட்டிருந்தது.

ஒரு கூடமும் அறையும்தான் சீமெந்தினால் கட்டப்பட்டிருந்தன. பக்கப் பகுதிகளுக்கு மண்ணினால் சுவர்களை அமைத்து கூரை வேயப்பட்டு ஒரு வழியாக 'வீடு' அமைக்கப்பட்டிருந்தது.

ஐயாவின் மரணமும் இந்த நிலமைக்கு ஒரு காரணம். மேசன் வேலை செய்து வந்த அவர் இழப்பினால் பெருமளவு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான்.

வேலை செய்யும் காலத்தில் அவர் பிடித்த சீட்டு பிற் காலத்தில் எங்களுக்கு உதவியது.

வீட்டு வளவில் நின்ற பழ மரங்களும் தங்கள் பங்குக்கு உதவின. அம்மாவும் சில வேளைகளில் வீட்டு வேலைகளுக்குப் போய் வருவாள்.

நினைவுகள் நெஞ்சில் நிழலாட முகம், கை, கால்களைக் கழுவிக் கொண்டு எல்லோருக்கும் பொதுவான அறைக்குள் சென்றேன்.

ஆச்சரியமாக கடைசித் தங்கை மீரா கையில் துவாயுடன் நின்றாள். இப்போதே என் மேல் கரிசனை வர ஆரம்பித்து விட்டது. சிரித்துக் கொண்டே துவாயை வாங்கிக் கொண்டேன்.

"அண்ணை, இந்தாங்கோ கோப்பி" வனிதா பேணியை நீட்டினாள்.
அதை வாங்கிக் கொண்டேன்.

என் பயணம் எல்லோரிடமும்தான் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. என்னை

விட மற்றவர்கள் அதிகமாக கற்பனை செய்கிறார்கள். எதிர்பார்க்கத் தொடங்கி-விட்டார்கள்.

கோப்பியைக் குடித்த பின் வஷீராவிடம் பேணியைக் கொடுத்து விட்டு கூடத்துக்கு வந்து முன் வாசற் படிகளில் அமர்ந்தேன்.

சனிக்கிழமையாதலால் பாடசாலை போகும் மாணவர்களை பாதையில் காணவில்லை.

சைக்கிள்கள்தான் கூடுதலாக ஓடித் திரிந்தன.

இரண்டு, மூன்று சிறுவர்கள் கத்திக் கொண்டு அரைக் காற்சட்டையுடன் ஓடி-னர்.

வெயில் கூடக்கூட வெப்பநிலையும் மாற்றமடைந்து கொண்டிருந்தது.

வெளியிலிருந்த ஒன்றைப் பார்த்து நாய் கோபப் பட்டுக் கொண்டிருந்தது.

வெளியிலேயே எங்கள் வசதிகள் தெரிந்தது. கிடுகுகள் அரிந்தும், விழுந்தும் வேலிகளுக்குரிய மரபை மீறியிருந்தன.

பாடசாலை வாழ்க்கையை நினைத்துப் பார்க்கின்றேன்.

ஓ. மிகவும் இனிமையான நாட்கள். அறிவு வளர்ச்சியுடன் நல்ல தோழர்களை-யும் தேடிக் கொண்டேன். பாடசாலை பிறிதான ஒரு உலகமே. கேலிகள், கிண்டல்-கள் செய்வதும் நாங்களே. ஒருவருக்கொருவர் துணையாக இருந்து கொள்வதும் நாங்களே.


முதல் நாள் சண்டை பிடித்துக் கொண்டால் அடுத்த நாளே ஒருவர் தோளில் ஒருவர் கை போட்டுக் கொண்டு வருவோம்.

பாட்டுகள் பாடுவோம். தனி நடிப்பு செய்வோம். விளையாட்டு, கலைவிழா என்றால் போதும். களைகட்டச் செய்து விடுவோம்.

பாடசாலை நடைமுறையிலே எனக்குப் பிடித்த அம்சம் மாணவர்கள் அனை-வரும் ஒரே மாதிரியாக வெள்ளை நிற உடுப்புகள் அணிந்து வர பணிக்கப்பட்டிருப்பது தான். வெளித் தோற்றத்தில் வித்தியாசங்கள் இல்லாமல் எல்லோரும் இணைந்து வைக்கப் படுகிறார்கள்.

"எனக்கு இன்னுமொரு ஆசையும் இருந்தது. சினிமா நடிகரைப்போல் இல்லா-மல் ஆசிரியர்களும் தூய்மையான வெண்ணிற ஆடையில் பாடசாலைக்கு வரவேண்டும் என்பதுதான்.

# நிஜங்கள்



பார்த்திபன்

"அண்ணை, சாப்பிட வரட்டாம்" மீனு வந்து சொன்னாள்.

எழும்பிப்போய் குசினி வாசலில் வைக்கப்பட்டிருந்த செம்புத் தண்ணீரில் கைகளைக் கழுவிக் கொண்டேன்.

இனி முன்பு மாதிரி தலை நிமிர்ந்து நடக்க முடியாது அம்மாவின் இராட்சி-யத்துக்குள் போவதென்றால் ஒருவரைத் தவிர யாரென்றாலும் தலை குனிந்துதான் உட் பிரவேசிக்க வேண்டும். அந்த ஒருவர் கட்டாயம் குள்ளமானவராக இருக்க வேண்டும்.

தரை சாணியால் மெழுகப்பட்டு மிகவும் சுத்தமாக இருந்தது.

பக்திப் படங்களில் கடவுளர்கள் புகையிலிருந்து பிரசன்னமாவது போல் அம்மாவும் புகை மூட்டத்திற்குள்ளால் தரிசனம் தந்தாள்.

அம்மாவைப் புதிதாகப் பார்ப்பவன் போலப் பார்க்கின்றேன்.

உழைப்பாலும், வயது முதிர்வாலும், அடுப்பு வெக்கையாலும் அவள் உடல் கறுத்து சுருக்கங்கள் விழுந்து தளர்ந்திருந்தது. ஆனால் அவள் மனம் தளர்ச்சியடைய வில்லை என்பது அவள் செய்யும் வேலைகளில் தெரிந்திருந்தது.

யாரும் உதவி செய்யாவிட்டாலும் எல்லா வேலைகளையும் தன் தலையில் போட்டுக் கொண்டு மாளுவாள்.

வீடு, வளவெல்லாம் சுத்தப்படுத்துவாள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அயல் வீடுகளுக்குப் போய் வேலைகள் செய்து கொடுப்பாள்.

இயந்திரங்களுக்கு கூட ஓய்வு கொடுக்க வேண்டும். இல்லையேல் துடேறி ஆயுட் காலத்தை முடித்துக் கொண்டு விடும்.

ஆனால் அம்மாவுக்கு கிடைக்கும் ஓய்வை முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களி-லும் விரல் விட்டு எண்ணி விடலாம்.

வெளியுலகில் தற்போது என்னதான் நடக்கிறது? சினிமாவில் யார்யார் புதி-தாக வந்திருக்கிறார்கள்? உடைகளில் கடைசியாக வந்த நாகரிகம் என்ன? இவை எல்லாம் அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமேயில்லை.

பிள்ளைகள், வீடு, சமையலறை என்று தனக்கென ஒரு உலகத்தை அமைத்து அதிலேயே நிரந்தரமாக குடியமர்ந்து விட்டாள்.

அம்மாவின் கஷ்டத்தை இனியும் நீடிக்க விடக் கூடாது. சவுதிக்குப் போய் உழைத்து முதல் எடுக்கும் சம்பளத்தில் நவீன சமையல் உபகரணங்கள் வாங்கி அனுப்பி விட வேண்டும்.

கூடிய சீக்கிரமே வீட்டை முழுமையாக்கி மின்சார இணைப்பும் கொடுத்தால் வேலைகளை மின்சாரசாதனங்கள் மூலம் இலகுவாக்கி, நேரத்தை குறைத்து அம்-மாவிற்கு ஓய்வு கொடுக்கலாம்.

"என்ன மோனை. தட்டில எல்லாம் அப்பிடியே இருக்கு. நல்லாச் சாப்பிடன். போற இடத்தில ஆர் கவனிக்கப் போகினம்?"

அம்மாவின் குரல் தளதளக்கிறது. கண்கள் ஈரமாவதும் தெரிந்தது.

நிச்சயம் அது புகையினால் வரவில்லை என்பதும் தெரிந்தது.

பாசம்-மனிதனை எப்படியெல்லாம் கட்டிப் போடுகிறது. ஒருவருக்கொருவர் நெருக்கமான இணைப்புகளை ஏற்படுத்தி விடுகிறது. இதே பாசம் தானோ கடவுள் மேல் பக்தியாகவும், ஆண்-பெண்களுக்கிடையில் காதலாகவும் பரிணமிக்கிறது?

காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டபின் கைவசமிருந்த உடைகளை துவைக்கின்றேன்.

தந்தையாகவும் கசக்கிக் கட்டுவதில் எங்கள் வீட்டில் எல்லோருமே வல்லவர்கள்.

தோய்த்த உடைகளை கொடியில் காயப் போடுகையில் பக்கத்து வேலிக்-கப்பாலிருந்து யாரோ பெண்கள் கதைப்பது கேட்டது.

"ஏன் நீர் கலியாண வீட்டை வரேல?"

"கொடி அடகு வைச்சது. எடுக்கேல. வெறும் கழுத்தோட வந்து நின்டா சனம் ஏதேன் கதைக்கும். அதுதான்......"

தாலிக் கொடிப் பேச்சு வந்ததும் எனக்கும் ஒரு மாதிரியாகத்தான் இருந்-தது.

அக்காவுக்கென்று அம்மா வைத்திருந்த தாலிக் கொடியை விற்றுத்தான் சவுதிக்குப் போவதற்கான பணத்தைக் கட்டியிருந்தேன்.

நான் எவ்வளவோ சொல்லியும் அம்மா கேட்கவில்லை.

"புரிசன்ரை நினைவு நெஞ்சில இருந்தாப் போதும். அதை மற்றவைக்கு விளம்பரப்படுத்த வேணுமெண்ட அவசியம் இல்லை. இளம் பொம்பிளையளுக்குத்தான் அது கழுத்தில இருக்க வேணும். பெட்டையளைக் கண்டவுடன பல்லை இளிக்கிற கழிசடையளிட்ட இருந்து பாதுகாக்க தால் தேவை. நான் கிழவிப் போனேன்.

எனக்கு பாதுகாப்பு ஒன்றும் அவசியமில்லை. நீ போய் உழைத்து இன்னும் கூடின பவுனில சகோதரங்களுக்கு செய்து போட மாட்டியே"

அம்மாவின் அழுத்தம் திருத்தமான கதையில் நான் மறுப்பேதும் சொல்லவில்லை.

விழிக்கும் போதும் மனம் கலங்கினாலும் என்னை நானே தேற்றிக் கொண்டேன். எங்களுக்கும் நல்ல காலம் வரத்தான் போகிறது.

உடுப்புத் தோய்க்கும் படலம் முடிந்ததும் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு வெளியில் புறப்படுகிறேன்.

தெருவில் நடந்து போகையில் ஊரின் மாற்றங்கள் தெளிவாக தெரிகின்றன.

இளைஞர்கள் அதிகம் பேரை காண முடியவில்லை. அநேகம் பேர் விடுதலைப் போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்து விட்டார்கள்.

இன்னும் சிலர் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்கள்.

இரண்டுக்குமே போக முடியாத சூழ் நிலையில் நான் இருக்கிறேன்.

வாசிக சாலைக்குள் நுழைகின்றேன்.

நேற்றைய பத்திரிகைகள் தான் இருந்தன. தீவிரவாதிகளின் தாக்குதல்களும், இராணுவத்தினரது அட்டகாசங்களும் மாறி மாறி முழு இடத்தையும் நிரப்பியிருந்தன.

கதைகளில், கவிதைகளில் கூட இன்றைய சூழ்நிலையின் தாக்கம் தெரிந்தது.


மேலுக்குப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்து விட்டு வாசிக சாலையிலிருந்து கொண்டே பாதையைப் பார்க்கின்றேன்.

எனக்கு ஐயாவின் ஞாபகம் வந்தது.

கட்டுமஸ்தான உடம்பும், அயராத உழைப்பும் அவரின் சிறப்புகள். அதிகாலையே புறப்பட்டு வேலைக்குப் போனால் இரவு ஏழு மணி தாண்டித்தான் வருவார்.

காலையில் சாப்பாடு இல்லை. மத்தியானம் பெரும்பாலும் பாணும் வாழைப் பழமும் தான். இரவில் மட்டும் வீட்டில் எங்கள் எல்லோருடனும் சாப்பிடுவார்.

வேலையிலிருந்து வரும்போது கள்ளுக் குடித்திருப்பார். அவருடைய உழைப்பையும், களைப்பையும் புரிந்து கொண்ட நாங்கள் எதுவும் சொல்வதில்லை. அவரும்



அநாகரிகமாக நடந்து கொள்வதில்லை. சனி, ஞாயிறுகளில் மட்டும் அவருடன் பழ-கும் சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைக்கும்.

ஒரு சனிக்கிழமை இறைச்சி வாங்கவென்று சந்தைக்குச் சென்றவர் விமானப்-படையினரால் கொலை செய்யப்பட்டு பிணமாக வீட்டுக்குள் கொண்டு வரப்பட்டார்.

அந்த நஷ்டத்தின் பின் நான் கஷ்டங்களைப் பற்றி அதிகமாக எம்மால் உணர முடிந்தது.

நெடு நேரம் ஒரே இடத்திலும் இருக்கப் பிடிக்காமல் வாசிகசாலையிலிருந்து தெருவுக்கு வருகின்றேன்.

அங்கே என்னுடன் படித்த நண்பனைக் காண்கிறேன்.

"என்ன, சவுதிக்குப் போகப் போகிறீராம்?"

"ஓம், ஓம்"

"எப்ப பயணம்?"

"வாற வெள்ளி. கொழும்பில இருந்து சவுதிக்கு சுகமா போயிடலாம். இங்க இருந்து கொழும்புக்குப் போறதுதான் பிரச்சனை."

"மெய் தான். றெயிலும் ஓழுங்கில்லை. ஓடினாலும் பத்திரமா போருவோம் என்டு நிச்சயமில்லை."

"அதுதான் யோசினையாயிருக்கு"

"ஒண்டும் யோசியாதையும். காலம் நல்லதாயிருந்தால் எல்லாம் நல்லபடி-யாய் நடக்கும். சரி நான் வரட்டே?"

"ம்"

அவனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு மீண்டும் வீட்டை நோக்கி நடக்-கின்றேன்.

இதற்குள் அம்மா சமையலை முடித்திருந்தாள்.

எனக்காக எல்லோரும் காத்திருந்தனர்.

சாப்பிட்டு முடித்தபின் வாசல் படியில் வந்து உட்காருகின்றேன்.

வெயில் கூடியிருந்தது. கதிரவன் மேற்காக கொஞ்சம் நகர்ந்திருந்தான். முகில் கூட்டங்கள் எங்கேயோ வேகமாகப் போய்க் கொண்டிருந்தன.'

நேரமும் போய்க் கொண்டிருந்தது.

பிற்பகல் மூன்று மணியளவில் தம்பி சிவம் வந்து சேர்ந்தான்.

யாரைக்கு முன்னே மணியோசை வருவது போல் சைக்கிள் சத்தம் பலமாக கேட்டது.

அது ஐயா பாவித்த சைக்கிள். அவர் காலத்திற்கும் முந்திய உற்பத்தி.

சிவமும், நானும் பாடசாலை போய் வருவதும் இதில்தான். வாழைக்குலை, மரக்கறிகளை சந்தைக்கு கொண்டு போவதும் இந்த இரண்டு கால் கழுதையில் தான்.

சிவம் என்னைப் பார்த்து சிரித்து விட்டு உள்ளே போய் விட்டான்.

அவன் போட்டிருந்த மேற் சட்டை வியர்வையில் ஈரமாகியிருந்தது.

பாவம். அவனுக்கும் என்னைப் போலவே வரையறுக்கப் பட்ட உடைகள்தான். பாடசாலைக்குப் போகும் வெள்ளை உடைகளை கூட வெளியிடத்துக்கும் பாவிக்க வேண்டியவர்களாயிருந்தோம்.

இனித்தான் நான் உழைக்கப் போகிறேனே. தம்பிக்கு சைக்கிள் வாங்கிக் கொடுப்பதும், உடுப்புகள் வாங்கிக் கொடுப்பதும் பெரியதொரு வேலையா?

வெயிலின் வெம்மை தணிந்ததும் உடுப்புகளை மாற்றிக் கொண்டு பிரயாணச்சீட்டு, தேவையான பத்திரங்களை வாங்குவதற்காக ஏஜன்சிக்கு வீட்டுக்குச் செல்ல தயாரானேன்.

"கவனமாய் போட்டு வா அண்ணை. ரோட்டில ஆமிக்காரன்கள் கண்டபடி திரிபுறுங்கள்"

தம்பி கவலைப்பட்டது எனக்குப் புதிதாகப் படவில்லை. எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டேன்.

காற்றுத் திசையாதலால் வேகமாக ஓட முடிந்தது.

ஏஜன்சிகாரன் வீடு யாழ் நகரில் இருந்தது.

நேராகவே ஏஜன்சிக்காரன் வீட்டுக்குப் போய் தேவையானவற்றை வாங்கிக் கொண்டு, அவசியமானவற்றைக் கதைத்துவிட்டு, நன்றி சொல்லி விட்டு வெளியே வந்து சைக்கிளை மிதித்தேன்.

பாதையில் ஒரு நடமாட்டமே இல்லை. அசாதாரண அமைதியாக இருந்தது. தமிழ் பகுதிகளில் அடிக்கடி இப்படி நிகழ்வதால் நான் அதிகம் யோசிக்கவில்லை.

வேகமாக சைக்கிளை ஓடுகின்றேன்.

வளைவால் திரும்பி சந்தியை நெருங்குகையில்தான் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கவச வாகனங்களும், துப்பாக்கிகளுடன் ஆங்காங்கே நின்ற இராணுவத்தினரும் கண்ணில் பட்டது.

திடுக்கிட்டு சைக்கிளை நிறுத்துவதற்கு முன் இராணுவத்தினன் ஒருவன் முந்திக் கொண்டு விட்டான்.

நெஞ்சு, வயிறு என்று குண்டுகள் பாய கத்திக் கொண்டே சைக்கிளுடன் கீழே விழுகின்றேன்.

குருதி கொப்பளிக்கும் இடங்களை கைகளால் அழுத்திப் பிடிக்கின்றேன்.

'அம்மா, வலி தாங்க முடியவில்லையே. யாருமே இல்லையா? யாருக்குமே என்னைத் தெரியவில்லையா? யாருமே என்னைக் காப்பாற்ற மாட்டார்களா?'

இராணுவமும், கவச வாகனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக மங்குகின்றன.

'ஐயோ, நான் சாகப் போகிறேனா? இந்தக் குண்டுகள் என்னோடு என் குடும்பத்தையே சாகடிக்கப் போகிறதா? அம்மா, அக்கா, தம்பி, தங்கைகள், வீடு, தாலிக் கொடி, கடன், பாசம்...... இதெல்லாம் துப்பாக்கிக்கு எப்படித் தெரியப் போகிறது. நான் சாகக் கூடாது. என் குடும்பத்துக்காக வா...ழ.... ...வே...ண்....டு....ம்...எ...ன்...னை...கா...ப்.... .

# கற்பு

"தேவிகா, தேவிகா"

தேவிகாவின் தாயார் பூமணி சமையலறையிலிருந்து உரக்க கூப்பிட்டாள்.

அவளுடைய குரலையும் மீறி வானொலியில் 'பாவாடைத் தாவணியில் பார்த்த உருவத்தை 'சௌந்தரராஜன் பலமாக விபரித்துக் கொண்டிருந்தார்.

வாசலில் தபால்காரன் தொடர்ந்து மணியடித்துக் கொண்டிருந்தார்.

அவன் வருகையை ஜன்னலால் பார்த்து விட்டுத் தான் பூமணி கத்தினாள். அடுப்பில் குழம்பு கொதித்துக் கொண்டிருந்தது.

தேவிகா போகாததை கண்டு தானே போய் தபாலை வாங்கினாள். கடிதத்தின் பின் பக்கத்தைப் பார்த்து பிரான்சிலிருந்து மகன் திலீபன் போட்ட கடிதம் என்பதை தெரிந்து கொண்டாள்.

சமையல் வேலையில் மிச்சம் இருந்ததால் கடிதத்தை மேசை மேல் வைத்து விட்டு மீண்டும் சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

இப்போது சுசீலா 'தங்கத்திலே குறை இருந்தாலும்..' என்று ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

படுக்கை அறையிலே கட்டிலில் உட்கார்ந்தபடி தேவிகா சட்டை தைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் போடப் போகும் சட்டையை எதிர்பார்த்து பொம்மை ஒன்று அவள் பக்கத்தில் படுத்திருந்தது.

பொம்மைக்கு சட்டை தைத்துக் கொண்டிருக்கும் அவள் படித்துக் கொண்டிருப்பது பத்தாம் வகுப்பு. வயதுக்கேற்றபடி ஆள் இல்லாமல் வெளிறிப் பெண்ணாக இருந்தாள். படிப்பது அம்புலிமாமா, சித்திரக் கதைகள்.

பொழுது போக்கு பக்கத்துவீட்டு சின்னக் குழந்தைகள். வானொலியை நாலு வீட்டுக்கு கேட்கும்படி சத்தமாகப் போடுவாள்.

விடுமுறை நாட்களில் கூட அம்மாவுக்கு சமையலில் உதவி செய்ய மாட்டாள். விளையாட்டுத்தனம் அதிகமாகவே இருந்தது.

பூமணி தனக்குள்ளேயே அவளைத் திட்டிக் கொண்டாலும் பிற் காலத்திலாவது இவள் திருந்த மாட்டாளா? என்று ஏக்கப் படுவாள்.

தேவிகா தைத்து முடித்த சட்டையை பொம்மைக்குப் போட்டு அழகு பார்த்தாள்.

'ஐய, எவ்வளவு வடிவாயிருக்கு' தனக்குள்ளேயே கூற காவித்துக் கொண்டாள்.

'தொப்பியும் போட்டா வடிவா இருக்குமே. என்ன கலரில தைக்கலாம்? சிவப்பு? சீ வேண்டாம். மஞ்சள் கலர்தான் நல்லாயிருக்கும்'

தனக்குள்ளேயே கேள்விகள் கேட்டு மறுமொழியும் சொல்லிக் கொண்டாள்.

'மஞ்சள் சட்டையில துண்டு வேணுமே? எங்கயோ கண்டனே. எங்க?'

'ஆ, மேசை லாச்சிக்குள்ள சின்ன துண்டு இருக்க வேணும்'

தேவிகா பொம்மையை பத்திரமாகப் படுக்கச் சொல்லி விட்டு துணியைத் தேடி அறையை விட்டு வெளியே வந்தாள்.

மேசையை நெருங்கிய போது திலீபனின் கடிதம் கண்ணில் பட்டது.

'அண்ணையின்ர லெற்றர்'

சந்தோசப் பட்டுக் கொண்டே கடித உறையை கிழித்துப் படித்தாள்.

21, Rue Bachlet

Paris 750018

அன்புள்ள அம்மா, அப்பா, தேவிகா

நான் சுகம். (இங்கிருப்பதால்) நீங்களும் அவ்வாறே இருக்க இறைவனை வேண்டுகின்றேன் (அப்படி ஒருவர் இருந்தால்). பாடசாலையை இராணுவம் எடுத்துக் கொள்ள இருப்பதாக எழுதியிருந்தீர்கள் (இப்போதுதான் அவர்களுக்கு படிக்க ஆர்வம் வந்ததோ?). அதனால் ஏற்படப் போகும் விளைவுகளைப் பற்றிய உங்கள் கவலை எனக்கும் புரிகிறது. இருந்தும் என்னால் எதுவும் செய்ய முடியாத தூரத்தில் இருக்கிறேன் (அருகில் இருந்தால் மட்டும் ஏதாவது செய்து விடுவேனோ?). நாட்டில் நடக்கும் கலவரங்களை எல்லாம் இங்கே

உள்ள செய்தி நிறுவனங்கள் மூலம் உடனுக்குடன் அறிகின்றேன். இலங்கை அரசுக்குச் சார்பான செய்திகளை இங்குள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள் தவறாமல் ஒளி பரப்புகின்றன. பத்திரிகைகளும் தாராளமாக இடம் விடுகின்றன.

எதற்கும் நீங்கள் கூடுமானவரை அவதானமாகவே இருங்கள். (?). தேவிகாவை அதிகம் வெளியே விடாதீர்கள். (வீட்டில் இருந்தால் மாத்திரம் ஒன்றும் நடந்து விடாதோ?). தேவையான சாமான்களை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள் (பிறகு?).

தமிழர்களுக்கு இரண்டு பக்கத்தாலும் அடி விழுகிறது என்று எழுதியிருந்தீர்கள். (பாவம் மக்கள்). இந்த ஒரு பக்கம் நாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டது. (ஒரு நம்பிக்கையில்தான்). தாளம் தப்பிய அடிகள் வருகையில் விழித்தெழுந்து திருத்த வேண்டியது நாங்கள்தான். (என்ன இப்படி ஒன்றுமே புரியமுடியாமல் எழுதியிருக்கிறானே என்று யோசிக்கிறீர்களா? நான் சுக தேகியாக இருக்க வேண்டாமோ?)

இங்குள்ள நிலைமையையும் நீங்கள் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். சமூக விரோதிகள் எனப் பெயர் பெற வேண்டியவர்கள் இங்கே தேவையானளவில் இருக்கிறார்கள். (மின் கம்ப வசதிகள் இல்லாததாலோ அல்லது 'வேண்டியவர்களுக்காகத்' தொழிற்படுவதாலோ தண்டனையிலிருந்து விலக்கி விட்டார்கள்). ஒருத்தர் ஜெக்கற் அல்லது பெட்டி அடித்தால் (போதை மருந்து விற்பனையாளர்கள் அன்புடன் சூட்டிய பெயர்கள்) ஆள் பணக்காரராகி உயர்ந்த அந்தஸ்தும் பெற்று விடுவார். இதெல்லாம் தவறாகாது என்று கூட பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். (பெரியவர்கள் உட்பட). பலர் கையும் களவுமாக அகப்பட்டு இருட்டுக்குள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளார்கள். (வேலைக் கஷ்டத்தினால் வீட்டுக்கு இவர்கள் கடிதம் போடுவதில்லையாம்).

இங்கு வந்துள்ள தமிழ்ப் பெண்களுக்கு (ஆண்களுக்கும் தான்) ஐரோப்பிய கலாசாரம் நன்கு பிடித்துப் போய் விட்டது போல் இருக்கிறது. எமது பண்பாடு, கலாசாரங்களை பிரான்ஸ் நாட்டுப் புத்தகங்களில் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். (ஒரு சிலருக்கு 'அ, ஆ' கூட வரச் சிரமப் படுகிறது).

எனக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. தேடிக் கொண்டேயிருக்கிறேன். பொழுது போக்காக எங்கள் ஆட்களை ரசிப்பதிலேயே நேரம் போகிறது. என்னுடைய அறையைப் பற்றி முன்பே எழுதியிருக்கிறேன். (எங்களுடைய வீட்டில் சாமான்கள் போட்டு வைத்திருக்கும் அறையைப் போன்ற இடத்தில் ஐந்து பேர் வசிக்கின்றோம் என்று). இப்போது புதிதாக இன்னொரு நண்பரும் வந்திருக்கிறார். படுக்கை வசதிகளை உத்தேசித்துத்தானோ என்னவோ அநேகம் பேர் பூங்காவிலும், தெருவிலும் படுத்தும், மதுபானச் சாலைகளில் 'தண்ணீர் குடித்தும்' இரவுப் பொழுதை ஒரு மாதிரியாக கழித்து விடுகிறார்கள். பகல் பொழுதுக்கு இருக்கவே இருக்கிறது வீடியோ. இந்தியாவில் திரையிடப் படுவதற்கு முன்பே இங்கே படங்கள் வந்து விடுகின்றன.

கடிதங்களின் போக்குவரத்துத் தொடர்புகளும் ஒரு வழியாகத் தூண்டிக்கப் பட்டுக் கொண்டு வருகின்றன. எனக்கு கிடைக்கும் ஒரே ஒரு ஆறுதல் உங்களின் கடிதங்கள்தான். அதுவும் இல்லையென்றால் நானும் வேறு பாதைகளில் போகக் கூடும்.

உங்களின் திலீபன்.

தேவிகா கடிதத்தை மூடி பழைய இடத்தில் வைத்தாள். அவளுக்கு அண்ணனுடைய கடிதங்களைப் படிப்பதென்றால் நல்ல விருப்பம்.

பிரான்ஸ் தேசத்தைப் பற்றி அறிவுடன் அங்கிருக்கும் தமிழர்களைப் பற்றியும் எழுதி வருவதை ஆர்வமாகப் படிப்பாள். ஆனால் முழு அர்த்தமும் புரிவதில்லை.

'அண்ணா பாவம். இங்க எவ்வளவு நல்லா இருந்தவர். அங்க போய் கஷ்டப்படுறார். அப்பாவுக்கு விசர். அவசரப்பட்டு அண்ணாவை பிரான்சுக்கு அனுப்பிப் போட்டு நிக்கிறார். அண்ணா அங்க என்னத்தைதான் செய்து சாப்பிடுதோ'

தேவிகாவுக்கு அண்ணனின் நிலைமை பரிதாபமாக இருந்தது.

"தேவிகா றேடியோவை நிப்பாட்டிப் போட்டு வந்து சாப்பிடு" பூமணி சமையலறைக்குள்ளிருந்து கூப்பிட்டாள்.

'சாப்பிடக் கூட நான் தான் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கிறது' அவள் முணுமுணுத்ததும் வெளியில் கேட்டது.

தேவிகா பொம்மை படுத்திருக்கிறதா என்று ஒருதரம் பார்த்து விட்டு வானொலியை நிறுத்தாமலேயே சமையலறைக்குள் போனாள்.

சாப்பாடு கோப்பையில் போடப்பட்டு தயாராக இருந்தது.

பூமணிக்குத் தெரியும். தேவிகாவையே சாப்பாடு போட்டுக் கொள்ள விட்டால் கோப்பையில் இருப்பதை விட மேசையிலிருக்கும் என்று.

"ஆ, சரியா உறைக்குது"

தேவிகா சொல்லிச் சொல்லி சாப்பிட்டாள்.

பூமணி பாத்திரங்களைப் போட்டு உருட்டிக் கொண்டிருந்தாள்.

சாப்பிட்டு முடிந்து உறைப்பைச் சமாளிக்க சீனியை எடுத்து வாயில் போட்-

டுமென்று கொண்டே அம்மாவின் திட்டையும் வாங்கிக் கொண்டு குசினியிலிருந்து வெளி வந்தவளுக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது பொம்மைக்குத் தொப்பி தைக்க வேண்டுமென்று.

மேசைக்குப் போய் கத்தரியை எடுத்து சின்னத் துண்டை வெட்டி எடுத்துக் கொண்டு மீண்டும் கட்டிலில் வந்தமர்ந்தாள்.

பொம்மை அப்படியே படுத்திருந்தது.

அவர்களின் வீடு அளவானதாக இருந்தது. இரண்டு அறைகள், சமையலறை, கூடம் பழைய சாமான்களை போட்டு வைக்க சிறியதொரு அறை.

வீட்டின் முன்னால் அழகான பூமரங்கள். இவை தேவிகாவினுடையவை. இவற்றிற்கு நீர் ஊற்ற அவள் மறப்பதேயில்லை.

வீட்டில் தேவைக்குப் போதுமானளவு தளபாடங்கள் இருந்தன. அநாவசியமானவை அதிகளவில் இல்லை.

தேவிகாவின் தந்தை வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் வேலை செய்கின்றார். வீட்டுக்கு வந்து போகும் நாட்கள் குறைவு. சனி, ஞாயிறுகளுடன் தொடர்ச்சியான விடுமுறைகள் வருகையிலேதான் அவர் வருகையும் பெரும்பாலும் இருக்கும்.

கடிதங்கள் அடிக்கடி போட்டுக் கொள்வார்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. மழை வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

"தேவிகா, தேவிகா"

முன் வாசலில் நின்று யாரோ கூப்பிட்டார்கள்.

"தேவிகா, ஆரோ கூப்பிடுயினம்" பூமணி எதிரொலித்தாள்.

தேவிகா கட்டிலை விட்டிறங்கி வாசலுக்குப் போனாள்.

வாசலில் வந்து நின்றது முன்றுவது வீட்டுச் சிறுமி.

"அக்கா, இந்தாங்கோ. எல்லாம் வாசிச்சுப் போட்டன். வேற தாறீங்களே?"

கையிலிருந்த சித்திரக் கதைப் புத்தகங்களை நீட்டினாள்.

"உள்ளுக்கு வா மஞ்சு"


RAMANI

புத்தகங்களை வாங்கிக் கொண்டு உள்ளே போய் வைத்து விட்டு வேறு புத்தகங்களை எடுத்துக் கொடுத்தார்.

மஞ்சு எலப்பட்ட சிறுமி அவற்றை வாங்கிக் கொண்டாள்.

மஞ்சுவும், தேவிகாவும் மீண்டும் வாசலுக்கு வந்த போது தெரு ஒரே தூர்ப்பாட்டமாக இருந்தது.

எல்லோரும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சைக்கிள்கள் முண்டியடித்தன.

மினி பஸ் நெரிசலின் டாக இரைந்து போனது. அதிலிருந்த ஒருவன் "ஆமிக்காரன்கள் வாறுங்கள்" என்று கத்திக் கொண்டிருந்தான்.

ஒரே சத்தமாக இருந்தது.

"மஞ்சு, நீ பின் பக்கத்தால கவனமாய் போ"

தேவிகா மஞ்சுவை அனுப்பி விட்டு வீட்டுக்குள் விரைந்தாள்.

"என்ன மஞ்சு? சனமெல்லாம் கத்திக் கொண்டோடுது"

பூமணி சேலையில் கையைத் துடைத்துக் கொண்டு பரபரத்துக் கேட்டாள்.

"ஆமிக்காரங்கள் வாறுங்களாம்"

"என்ன அநியாயங்கள் நடக்கப் போகுதோ. தேவிகா நீ அறைக்க போய் இரு. வெளியால வராதை."

பூமணி படபடப்புடன் சொல்லிக் கொண்டே ஜன்னல்களை மூடினாள்.

"அந்த றேடியோச் சனியனை நிப்பாட்டு" அறையைப் பார்த்து கத்தினாள்.

பிறகு முன் கதவருகிலிருந்த ஜன்னல் அருகே வந்து மெல்லிய இடைவெளியினூடாக வெளியே பார்த்தாள்.

தெருவில் நடமாட்டம் குறைந்து கொண்டே வந்தது. திடீர் அமைதி ஒன்று ஏற்பட்டது.

எங்கும் வெறிச்சோடியிருந்தது. மழை இருட்டு நிலைமையை பயங்கரமாக்கியது.

இந்த ஊரின் அருகில் தான் இரண்டு நாட்களுக்கு முன் கண்ணி வெடி வெடித்து பல இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

அடுத்த நாட்களில் அசம்பாவிதம் ஏதும் நடக்கலாம் என்று இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்திருந்தாலும் எதுவும் நடக்கவில்லை.

இப்போது?

'கால் நடையாக' ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் முன்னே நடந்து வந்தனர்.

அவர்களைப் பின் தொடர்ந்து கனரக, கவச வாகனங்கள் மெதுவாக வந்து கொண்டிருந்தன.

பூமணி படபடக்கும் நெஞ்சுடன் ஜன்னல் இடைவெளியினூடாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேவிகா அறையினுள் பொம்மையை அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென துப்பாக்கிகள் சத்தம் போடத் தொடங்கின.

அபயக் குரல்கள் ஒலித்தன.

மழை இருட்டினூடே திடீர் வெளிச்சங்கள் மின்னி மறைந்தன.

பூமணி பயத்துடன் ஜன்னலை விட்டு நகர்ந்து தேவிகா இருந்த அறைக்குப் போனாள். சைவசமயத்திலுள்ள சகல கடவுள்களையும் அவள் மனம் வேண்டிக் கொண்டிருந்தது.

அந்த வீட்டில் மயான அமைதி நிலவியது.

மணிக்கூட்டின் சத்தம் பெரிதாக 'டிக்'கியது. முட்கள் அவசரமில்லாமல் நகர்ந்தன.

பூமணி இறைவன்களை பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேவிகா கூட பொம்மையை கைவிட்டு கண்களில் பயத்துடன் இருந்தாள்.

சிறிய நேரத்தின் பின் முன் வாசல் பக்கம் ஆரவாரங்கள் கேட்டன. சப்பாத்துச் சத்தங்களும் கேட்டன.

தேவிகா புமணியுடன் ஒட்டி அமர்ந்தாள்.

திடீரென முன் கதவில் ஏதோ இடிக்கும் சத்தம் பலமாகக் கேட்டது.

சிங்களத்தில் பலர் கதைப்பதும் கேட்டது.

'ஆமிக்காரன் இங்க வந்திட்டான்?என்ன செய்யிறது?தேவிகாவையும் கூட்டிக் கொண்டு பின் பக்கத்தால ஓடுவோமா?'

புமணி பலவாறு யோசித்துக் கொண்டு தேவிகாவின் கையைப் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல அறையை விட்டு வெளியே வந்தாள்.

அவர்கள் கூடத்திற்கு வரவும் கதவை உடைத்துக் கொண்டு இராணுவம் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

திமுதிமுவென உள்ளே வந்த இராணுவத்தினர் மூலைக்கொருவராக நின்று கொண்டார்கள்.

இன்னும் சிலர் ஓடி வந்து புமணியையும், தேவிகாவையும் சூழ்ந்து கொண்டார்கள்.

இருவராலும் கத்தக் கூட முடியவில்லை. பயத்தால் உடம்பு நடுங்கியது.

இருவரும் ஒருவரை ஒருவர் இறுகப் பிடித்துக் கொண்டார்கள்.

உள்ளே வந்த இராணுவத்தினர் சிலர் எல்லா அறைகளுக்குள்ளும் புகுந்து 'எதையோ' தேடினார்கள். அலுமாரிகளை சரித்து விழுத்தினார்கள். பொருட்களைப் புரட்டி எறிந்தார்கள்.

புமணிக்கும், தேவிகாவுக்கும் எங்கேயோ அந்நிய இடத்தில் நிற்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

சுற்றிலும் காக்கி உடைகள். துப்பாக்கிகள். சிங்களப் பரிவர்த்தனைகள்.

இருவருக்கும் வியர்த்தது.

இராணுவத் தலைவன் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

மூன்று பேர் வந்து தேவிகாவை பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்.

"அம்மா, அம்மா" தேவிகா அழுதாள்.

திடுக்கிட்ட பூமணி நகர முற்பட முன்னரே வேறு இரண்டு பேர் வந்து அவளை இரண்டு பக்கங்களிலுமாகப் பிடித்துக் கொண்டார்கள்.

பூமணி திமிறினாள். கத்தினாள்.

அவர்கள் எதற்கும் அசைவதாயில்லை.

பூமணிக்குச் சிறிது தூரம் முன்பாக தேவிகாவை நிறுத்தினார்கள்.

தேவிகா அழுது கொண்டேயிருந்தாள். அவள் நன்றாகவே மிரண்டு போயிருந்தாள்.

இரண்டு பேர் அவளைப் பிடித்திருக்க மூன்றாமவன் அவள் முன்னால் வந்து நின்றான்.

கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே போட்டான்.

தேவிகாவின் சட்டையை கையால் பிடித்து இழுத்துக் கொண்டு இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்து சட்டையை மேலிருந்து கீழாக கிழித்தான்.

சட்டை கீழே காலடியில் விழுந்தது.

பூமணிக்கு நடக்கப் போவது தெரிந்து விட்டது. கத்தியபடியே தேவிகாவை நோக்கி ஓட முயற்சித்தாள்.

"தேவிகா, தேவிகா" என்றலறினாள். அங்குமிங்கும் இழுத்தாள்.

ஆத்திரமடைந்த இராணுவத்தினன் ஒருவன் துப்பாக்கியின் பின் பக்கத்தால் பூமணியின் தலையில் தாக்கினான்.

பூமணிக்குத் தலையை வலித்தது. கண்கள் செருகியது.

மீண்டும் ஒரு அடி தலையில் விழுந்தது.

பூமணி தள்ளாடியபடியே கீழே விழுந்து மயக்கமானாள்.

தேவிகா நாக்கு வரள அழுது கொண்டேயிருந்தாள்.

எதையுமே அசட்டை செய்யாமல் தனது உடுப்புகளையும் அகற்றிய இராணுவத்தினன் மிருகத்தனமாக அந்தச் சின்னப் பெண்ணின் மேல் சரிந்தான்.

அவளைத் தொடர்ந்து மற்றவன்....

தொடர்ந்து.....

சுவரில் மாட்டப்பட்டிருந்த முருகப் பெருமான் தம்பதி சமேதராக அங்கே நடந்து கொண்டிருக்கும் கற்பழிப்புக் காட்சியை பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

தேவிகா கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். கண்கள் கூரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவளுடைய பொம்மை சிதைக்கப்பட்ட நிலையில் கட்டிலின் கீழிருந்தது.

தேவிகா வைத்தியசாலையிலிருந்து வந்து இரண்டு வாரங்களாகி விட்டன. அவளுடைய உடம்புக்குத்தான் சிகிச்சை செய்யப் பட்டதே தவிர பிஞ்சு மனத்தின் ரணத்திற்கு யாராலும் மருத்துவம் செய்ய முடியவில்லை.

அந்த வீட்டில் சம்பவம் நடந்த நாளிலிருந்து சாவு நடந்த வீடு போல் ஒரே துக்கம்தான்.

பூமணி பித்துப் பிடித்தவள் போல் மூலையிலிருந்து அரற்றிக் கொண்டிருந்தாள். செய்தி கிடைத்து தேவிகாவின் தகப்பனும் வந்திருந்தார். கலங்கிய கண்களுடன் மைத்துனனுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

அந்த ஊரில் பல இழப்புகள் ஏற்பட்டிருந்தன. வீடுகள், தளபாடங்கள் சேதமாக்கப்பட்டிருந்தன. தமிழச்சிகள் சிலர் மானபங்கப்படுத்தப்பட்டிருந்தனர். பல வீட்டுத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

சிறுவர்கள், இளைஞர்கள் எல்லோரும் தகவலை முன் கூட்டியே அறிந்த படியால் வேறு மறைவிடங்களுக்கு ஓடி உயிர் பிழைத்துக் கொண்டார்கள்.

தேவிகா வீட்டை விட்டு வெளியே போகவேயில்லை. எப்படிப் போவது? எந்த முகத்துடன் போவது? இரவும் அவள் எதிலும் ஒட்டாமல் அந்த அறையிலேயே அடைந்திருந்தாள்.

ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை. அதிகமாகக் கதைப்பதில்லை. கேட்கப்படும் கேள்விகளுக்கு கூட முழுதாகப் பதில் சொல்வதில்லை.

அவள் முன்பு போலில்லை. எதையுமே சிந்தித்தாள். இப்போதுதான் புதிதுபுதிதாக அவளுக்குப் பல புரிந்தன.

அவள் சராசரிப் பெண்ணாகிக் கொண்டிருந்தாள்.

"ஐயோ, மானம் போச்சே"

புவனி குரலைக் கூட்டிக் குறைத்து அழுது கொண்டிருந்தாள்.

தேவிகாவுக்கும் அழு குரல் காதில் விழுந்தது.

'மானம் என்றால் என்ன? கற்பு என்றால் என்ன? கற்பு வேறு மானம் வேறா? நான் கற்பழிக்கப்பட்டவள் என்றால் என்ன? மானபங்கப்படுத்தப்பட்டவள் என்றால் என்ன? இரண்டும் ஒன்று தானே?

நான் மானம் இழந்தவள் என்றால் இராணுவம் ஊருக்குள் நுழையும் போது பயந்து, ஓடி, ஒளித்து விட்டு, இப்போது திரும்பவும் மதிலில் உட்கார்ந்து, அர்த்தமற்ற கதைக்கும், வீராப்புக் கதைக்கும், வீடியோ பார்க்கும் எல்லா ஆண்களும் மானம் இழந்தவர்களே.

நான் கற்பிழந்தவள் என்றால் பெண்களை, குழந்தைகளைத் தவிக்கவிட்டு தமது உயிரை பெரிதாக மதித்து தப்பியோடிய சுயநலமிக்க ஆண்கள் அத்தனை பேரும் கற்பிழந்தவர்களே.

கற்பு என்ன பெண்களுக்கு மட்டும்தான் உரிய ஒன்றா?

அல்லது பிறிம்பாக காணப்படும் ஏதாவதொன்றா?

ஆண்களுக்கு கற்பு தேவையில்லையா?

அல்லது அவர்களுக்கு இல்லையா?

நான் யாருக்காக வெட்கப்பட வேண்டும்?

மானமுள்ளவர்கள் முன்னால்தானே வெட்கப்பட வேண்டும்?

இங்குதான் அப்படி யாரும் இல்லையே.

நான் வெளியே போக வேண்டும்.

என்னை மீறி நடந்த செயலுக்கு நானே எனக்கு ஏன் சிறைத் தண்டனை விதித்துக் கொள்ள வேண்டும்?

தேவிகா இப்போது பழைய பெண் இல்லை.

"அம்மா"

தேவிகாவின் குரலில் பழைய விளையாட்டுத் தனமும் இருக்கவில்லை.

---

கதைகளில் இடம் பெற்றுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே.
08.1986 ல் வெளியிடப்பட்ட 'ஜனனம்' கையெழுத்துப் பிரதி யின் மறு பதிப்பாக 01.1987 ல் இவ் வெளியீடு வெளியிடப்படுகிறது.

என்னுடைய பக்கங்கள்.......

வணக்கம். இரண்டாவது முறையாகச் சந்தித்துக் கொள்கிறோம்.

தமிழுக்கும் அமுதென்று பெயர் இருப்பதைத் தெரிந்து கொண்டாலும் தமிழில் உள்ள சொற்கள் அனைத்திற்கும் அர்த்தங்கள் தெரிந்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். முதன் முதலில் தமிழ் அகராதியை வெளியிட்டவர் ஒரு இத்தாலியர் என்பதை அறிந்து ஆச்சரியப் படும் அதே வேளை தமிழையே தாய் மொழியாகக் கொண்டு, தமிழிலேயே வளர்ந்தவர்கள் சில தமிழ் சொற்களுக்கு பிழையான அர்த்தங்களைப் புரிந்து கொண்டதுடன் அதை நியாயப்படுத்துவதன் மூலம் தமது முட்டாள்தனத்தை பறைசாற்றுவதைப் பார்த்து பரிதாபப்படவும் வேண்டும். உதாரணமாக 'கற்பு'.

இப்படியான அறியாமைகளை அகற்றுமலிருப்பதற்காக கூடவே சில கட்டுப்பாடுகள். வழக்கங்கள்.

தொடர்ந்தும் சந்ததிகளினூடாக இவை பரிமாறப் படலாமா?

இன்று நமது தாய் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் அக்கிரமங்களினால் பாதிக்கப்படுபவர்களில் பெண்களே கூடுதலான புள்ளிகளைப் பெற வேண்டியவர்களாகிறார்கள். இவர்களுடைய துயரங்களைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் வெளிநாடுகளிலிருக்கும் எங்களுக்கு கிடைக்கத்தான் போகிறது. அப்போதும் பார்வையாராக இருக்காமல் பங்காளராக மாற்றிக் கொள்ள எங்களை தயார் படுத்திக் கொள்வோம்.

தாய் நாட்டிலிருந்து நீண்ட தூரங்கள் தள்ளி இங்கே அந்நிய நாடுகளுக்கு வந்து விட்டதால் எமக்குரிய கடமைகள், பங்களிப்புகளிலிருந்து தப்பி வந்து விட்டோம் என்று சந்தோசப்படக் கூடியவர்கள் யாரேனும் இருந்தால் அவர்கள் மனித இனத்துடன் இணைந்து கொள்ள தகுதியற்றவர்களே.

உயிர் பாதுகாப்புக்காகவோ, உழைப்பதற்காகவோ எல்லாவற்றையும் உதறி தள்ளி விட்டு ஓடி வந்து விட்ட எமது தவறுக்கான பிராயச்சித்தமாகவோ ஒரு மனிதனுக்குள்ள பண்பாகவோ எமது பங்கை செயல்படுத்துவதற்கான நாளை எதிர் பார்ப்போம்.

வித்தியாசப்படும் வித்தியாசங்களுடன் சந்திப்போமே.

-பார்த்திபன்.
08.1986

Contact Address:

SÜD ASIEN BÜRO
Kiefernstr 45
5600 Wuppertal 2
West Germany

Tel:(0202)507156

விரைவில்

# பாதி உறவு

மனிதன்
சூழலைப்
பாதிக்கையில்
சூழல்
மனிதனை
பாதிக்காதா?

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

அடுத்த
வெளியீடு.....

# வித்தியாசப்படும் வித்தியாசங்கள்

எல்லோரும்
மனிதர்களே
ஆனாலும்
ஏன்
இந்த
வித்தியாசங்கள்?